**செய்தி வெளியீடு எண்: 783** **நாள்: 17.11.2017**

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் 2017ம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் மாதம் வரை 14,077 நபர்கள் சாலை விபத்தில் உயிரிழந்துள்ளனர். சாலை விபத்துகளையும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளையும் குறைப்பதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சாலை விதிகளை முறையாக கடைபிடிக்கவும் சாலையில் பொறுப்புடன் நடந்து கொள்ள ஏதுவாகவும் வாகனம் இயக்கும் போது அசல் ஓட்டுநர் உரிமம் வைத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அசல் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் இயக்குபவர்கள் குற்றவியல் நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவார்கள். அதிவேகம், சிகப்பு விளக்கை தாண்டுதல், குடிபோதையில் வாகனம் இயக்குதல், வாகனம் இயக்கும் போது செல்போன் உபயோகப்படுத்தல் போன்ற போக்குவரத்து விதி மீறல்களுக்காக ஓட்டுநர் உரிமங்கள் தற்காலிக ரத்து செய்யப்பட்டு வருகின்றன. 2017 அக்டோபர் மாதம் வரை 86,873 ஓட்டுநர் உரிமங்களை போக்குவரத்து துறை ஏற்கனவே தற்காலிக ரத்து செய்துள்ளது. மேலும், இரு சக்கர வாகனங்களால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகள் மிக அதிகமாக உள்ளது. 2017ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை 4,730 இரு சக்கர வாகன ஓட்டிகளும், பின் இருக்கையில் அமர்ந்து செல்பவர்களும் தலைக்கவசம் அணியாத காரணத்தால் சாலை விபத்தில் உயிரிழந்துள்ளனர். இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின் இருக்கையில் அமர்ந்து செல்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இருசக்கர வாகன விற்பனை உரிமையாளர்களிடம் தங்களது விற்பனை மையங்களில் “**சாலை பாதுகாப்பு மையம்**” ஒன்றினை உருவாக்க கேட்டுக் கொண்டதன் பேரில் சாலை பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு, அம்மையங்களுக்கு ஒலி, ஒளி நாடாக்கள் மற்றும் சாலை பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் ஆகியவை சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. புதிதாக இரு சக்கர வாகனங்கள் வாங்குபவர்களுக்கு வாகனத்தை ஒப்படைக்கும் முன்பு சாலை பாதுகாப்பு குறித்து விரிவான விழிப்புணர்வினை இருசக்கர வாகன விற்பனை முகவர்கள் மூலம்

ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி சாலை பாதுகாப்பு ஆணையரின் கோரிக்கையினை ஏற்று 2017 நவம்பர் மாதத்தில் மட்டும் இரு சக்கர வாகன விற்பனை உரிமையாளர்கள் தங்களது விற்பனை மையங்களில் 485 சாலை பாதுகாப்பு மையங்கள் தானாகவே முன்வந்து ஏற்படுத்தி உள்ளனர். அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளின் பலனாக 2016ஆம் ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரை நடைபெற்ற விபத்துகளை ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டில் 5,145 சாலை விபத்துகளும் அதனால் 525 உயிரிழப்புகளும் குறைந்துள்ளன.

எனவே நம் மாநிலத்தில் உள்ள அனைத்து சாலை உபயோகிப்பாளர்களும் சாலை விபத்துகளை குறைக்கவும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்கவும் சாலை விதிகளை மதித்து அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**